N. SHANGAR.

க.பொ.த. (உ/த) பரீட்சை - 2015

02 - இரசாயனம்

புள்ளிகள் வழங்கப்படல்

வினாப்பத்திரம் I	1×50	=	50
வினாப்பத்திரம் II			
பகுதி A :	4×100	=	400
பகுதி B :	2×150	=	300
பகுதி C :	2×150	=	300
மொத்தம்		=	1000
பகுதி A இறுதிப்புள்ளி		=	100

Download Past Papers at : www.freebooks.lk

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2015 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சை, 2015 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2015

රසායන විද්‍යාව I
இரசாயனவியல் I
Chemistry I

02 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

கவனிக்க :
- ※ ஆவர்த்தன அட்டவணை வழங்கப்பட்டுள்ளது.
- ※ இவ்வினாத்தாள் 08 பக்கங்களைக் கொண்டுள்ளது.
- ※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ※ **கணிப்பானைப் பயன்படுத்தக்கூடாது.**
- ※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ※ விடைத்தாளின் பிறபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாகப் பின்பற்றுக.
- ※ 1 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தில்** தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (x) இடுக.

அகில வாயு மாறிலி $R = 8.314 \text{ J K}^{-1}\text{ mol}^{-1}$
அவகாதரோ மாறிலி $N_A = 6.022 \times 10^{23} \text{ mol}^{-1}$
பிளாங்கின் மாறிலி $h = 6.626 \times 10^{-34} \text{ J s}$
ஒளியின் வேகம் $c = 3 \times 10^8 \text{ m s}^{-1}$

---

1. அணுக் கட்டமைப்பின் 'பிளம்-புடிங்' (plum pudding) மாதிரியுருவை முன்வைத்தவர்
(1) ஜோன் டோல்ரன் (2) J. J. தொம்சன் (3) கிளென் சீபோர்க்
(4) எர்னஸ்ட் இரதபோர்ட் (5) ரொபர்ட் மில்லிக்கன்

2. B, O, S, S^{2-}, Cl ஆகிய அணுக்களின்/அயன்களின் ஆரைகள் **அதிகரிக்கும்** ஒழுங்கு முறையே
(1) $B < O < Cl < S < S^{2-}$ (2) $S < S^{2-} < O < B < Cl$
(3) $O < B < Cl < S < S^{2-}$ (4) $O < B < S < S^{2-} < Cl$
(5) $B < O < S < S^{2-} < Cl$

3. சேர்வை **X** இன் IUPAC பெயர் யாது ?
(1) 2–hydroxy–2–methyl–5–oxo–3–hexynoicacid
(2) 2–hydroxy–2–methyl–5–oxo–3–hexynoic acid
(3) 2–hydroxy–5–keto–2–methyl–3–hexynoic acid
(4) 5–carboxy–5–hydroxy–3–hexyn–2–one
(5) 2–carboxy–5–oxo–3–hexyn–2–ol

$CH_3-C(=O)-C\equiv C-C(OH)(CO_2H)-CH_3$

X

4. அணுக்களின் இயல்புகள் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் **தவறானது** எது ?
(1) அயடீன் அணுவின் பங்கீட்டுவலு ஆரை அதன் வந்தர்வால்சின் ஆரையை விடச் சிறியதாகும்.
(2) O அணுவின் முதலாம் இலத்திரன் நாட்டம் N அணுவின் அப்பெறுமானத்தை விட அதிகமாகும்.
(3) அணுவொன்றின் அயனாக்கற் சக்தியைத் தீர்மானிப்பது அதன் கருவேற்றமும் ஆரையும் மாத்திரம் ஆகும்.
(4) Li அணுவின் வலுவளவு இலத்திரனால் உணரப்படுகின்ற கருவேற்றம் 3 ஐ விடக் குறைவாகும்.
(5) பௌலிங் அளவுத்திட்டத்தில் C அணுவின் மின்னெதிர்த்தன்மை S அணுவின் மின்னெதிர்த்தன்மைக்குச் சமனாகும்.


5. பின்வரும் சேர்வைகளுள் **மிகக் குறைந்த** ஆவிப்பறப்புத் தன்மையைக் கொண்டது எது ?
(1) CBr_4 (2) $CHBr_3$ (3) CH_2Br_2 (4) CH_3Cl (5) CH_2Cl_2

6. காபனேற்றுகளின் கலவையொன்றில் அடங்கியுள்ள $MgCO_3$, $CaCO_3$ என்பவற்றுக்கிடையிலான மூலர் விகிதம் முறையே 5 : 1 ஆகும். இக்கலவையின் தெரிந்த திணிவொன்றை வெப்பமாக்கியபோது உருவாகிய CO_2 ஆனது நியம வெப்பநிலையிலும் அமுக்கத்திலும் 134.4 dm^3 என்னும் கனவளவைக் கொண்டிருக்கும். வெப்பமாக்கிய காபனேற்றுக் கலவையின் திணிவு (C = 12, O = 16, Mg = 24, Ca = 40, நியம வெப்பநிலையிலும் அமுக்கத்திலும் வாயுவொன்றின் ஒரு மூல் 22.4 dm^3 கனவளவைக் கொண்டிருக்கும்)
(1) 52 g (2) 520 g (3) 750 g (4) 900 g (5) 1040 g

7. A_3B_2 ஆனது நீரில் அரிதிற் கரையும் உப்பாகும். 25 °C இல் அதன் கரைதிறன், கரைதிறன் பெருக்கம் என்பன முறையே s mol dm^{-3} உம் K_{sp} உம் ஆகும். s இற்கான **சரியான** கோவை
(1) $\left(\frac{K_{sp}}{36}\right)^5$ (2) $\left(\frac{K_{sp}}{36}\right)^{1/5}$ (3) $\left(\frac{K_{sp}}{72}\right)^{1/5}$ (4) $\left(\frac{K_{sp}}{108}\right)^{1/5}$ (5) $\left(\frac{K_{sp}}{108}\right)^5$

Download Past Papers at : www.freebooks.lk

8. பின்வரும் எத்தாக்கம் மெதேனின் சுயாதீன மூலிகக் குளோரீனேற்றத் தாக்கத்தின் ஒரு விருத்திப் படியைச் சரியாகக் காட்டுகின்றது ?



(1) $Cl-Cl \xrightarrow{h\nu} \dot{C}l + \dot{C}l$ (2) $\dot{C}l \ \dot{C}l \longrightarrow Cl-Cl$

(3) $\dot{C}H_3 \ Cl-Cl \longrightarrow CH_3Cl + \dot{C}l$ (4) $H-CH_3 \ \dot{C}l \longrightarrow CH_3Cl + \dot{H}$

(5) $H-Cl \ \dot{C}H_3 \longrightarrow CH_3Cl + \dot{H}$


9. அலுமினியத்தின் இரசாயனவியல் தொடர்பாகப் பின்வரும் எக்கூற்று **தவறானது** ?
(1) அலுமினியம் சேர்வைகள் ஊக்கிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.
(2) அலுமினிய உலோகம் ஐதான HCl உடன் தாக்கம்புரிந்து H_2 வாயுவை உருவாக்கும்.
(3) திண்ம அலுமினியம் குளோரைட்டை நீரில் கரைக்கும்போது மூலக் கரைசல் ஒன்று உருவாகும்.
(4) திண்ம அலுமினியம் குளோரைட்டின் அலுமினியம் அணுக்களைச் சூழ உள்ள வடிவம் நான்முகி ஆகும்.
(5) திண்ம நிலையில் அலுமினியம் குளோரைட்டு இருபகுதியம் (dimer) ஆகக் காணப்படும்.

10. பின்வரும் அட்டவணையில் எந்நிரை, மூலக்கூறு SSF_2 இன் மத்திய S அணு தொடர்பாகச் **சரியான** தகவல்களைத் தரும் ?

	ஒட்சியேற்ற நிலை	ஏற்றம்	கலப்பாக்கம்	வடிவம்	$S\text{-}SF_2$ இலுள்ள S-S σ- பிணைப்பின் இயல்பு
(1)	+1	0	sp^3	நான்முகி	S (3p அ. ஓ.) + S (sp^3 க. ஓ.)
(2)	+2	0	sp^2	தள முக்கோணம்	S (3p அ. ஓ.) + S (sp^2 க. ஓ.)
(3)	+2	0	sp^3	கூம்பகம்	S (3p அ. ஓ.) + S (sp^3 க. ஓ.)
(4)	+1	+1	sp^3	கூம்பகம்	S (3p அ. ஓ.) + S (sp^3 க. ஓ.)
(5)	+2	+1	sp^2	தள முக்கோணம்	S (3p அ. ஓ.) + S (sp^2 க. ஓ.)

(அ. ஓ. = அணு ஓபிற்றல், க. ஓ. = கலப்பு ஓபிற்றல்)

11. **A** வெப்பமாக்கப்படும்போது பின்வரும் சமநிலைக்கேற்ப **B, C** ஆகியவற்றை ஆக்கிக்கொண்டு பிரிகையடைகிறது.



$$2A(g) \rightleftharpoons 2B(g) + C(g)$$

தூய **A** இன் ***a*** மூல்களை ஒரு மூடிய 1 dm^3 கொள்கலத்தினுள் மாறா வெப்பநிலை **T** இற்கு வெப்பமாக்கும்போது சமநிலைக் கலவையில் **C** இன் **c** மூல்கள் இருக்கும். வெப்பநிலை **T** இல் இத்தாக்கத்தின் சமநிலை மாறிலி K_c இற்கான **சரியான** கோவை

(1) $K_c = \frac{4c^3}{(a-2c)^2}$ (2) $K_c = \frac{4c^3}{(a-c)^2}$ (3) $K_c = \frac{c^3}{(a-c)^2}$ (4) $K_c = \frac{8c^3}{(a-2c)^2}$ (5) $K_c = \frac{c^3}{(a-2c)^2}$

12. 3*d* தாண்டல் மூலகங்கள் உருவாக்கும் சிக்கல்களின் நிறம் தொடர்பாகப் பின்வரும் கூற்றுகளில் **தவறானது** எது ?

(1) $[Ni(NH_3)_6]^{2+}$ கடும் நீல நிறமாகும். (2) $[CuCl_4]^{2-}$ இளநீல நிறமாகும். (3) $[NiCl_4]^{2-}$ மஞ்சள் நிறமாகும்.
(4) $[Co(NH_3)_6]^{2+}$ மஞ்சட் கபில நிறமாகும். (5) $[CrCl_4]^{-}$ நீல ஊதா நிறமாகும்.


13. திரவ ஹெப்ரேன் (C_7H_{16}) மாதிரியொன்றின் 10.0 g ஆனது O_2 வாயுவின் 1.30 மூல்களுடன் கலக்கப்பட்டது. ஹெப்ரேனைப் **பூரணமாகத்** தகனமடையச் செய்யும்போது CO, CO_2 வாயுக்களின் கலவையொன்று உருவாகின்றது. தாக்கத்தின் பின்னர் அறை வெப்பநிலையில் காணப்படும் வாயுக் கலவையின் (CO, CO_2, O_2) மொத்த மூல்களின் அளவு 1.1 ஆக இருந்தது. (உருவாகிய நீர் திரவமாக இருக்கின்றதெனவும் அதில் வாயுக்களின் கரைதிறன் புறக்கணிக்கத்தக்கது எனவும் கொள்க.) உருவாகிய CO வாயுவின் மூல்கள் (H = 1, C = 12, O = 16)
(1) 0.40 (2) 0.45 (3) 0.50 (4) 0.52 (5) 0.54

14. 27 °C இல் தூய திரவம் **A** அதன் ஆவியுடன் சமநிலையிலுள்ள ஒரு மூடிய தொகுதியைக் கருதுக. இவ்வெப்பநிலையில் திரவம் **A** இன் ஆவியாதலின் வெப்பவுள்ளுறை 20.00 kJ mol^{-1} ஆகும். 27 °C இல் **A** இன் ஆவியாதலின் எந்திரப்பி J K^{-1} mol^{-1} இல்
(1) 0.01 (2) 0.07 (3) 5.66 (4) 14.30 (5) 66.67

15. $KClO_3$ இனை வெப்பப் பிரிகையடையச் செய்வதன் மூலம் உருவாகும் O_2 வாயு நீரின் கீழ்முகப்பெயர்ச்சி மூலம் சேகரிக்கப்படுகிறது. 27 °C இலும் 1.13×10^5 Pa அமுக்கத்திலும் நிகழ்த்தப்பட்ட இவ்வாறான ஒரு பரிசோதனையில் சேகரிக்கப்பட்ட O_2 வாயுவின் கனவளவு 150.00 cm^3 ஆகும். 27 °C இல் நீரின் நிரம்பல் ஆவியமுக்கம் 0.03×10^5 Pa எனத் தரப்பட்டிருப்பின், சேகரிக்கப்பட்ட O_2 வாயுவின் திணிவு (O = 16)
(1) 0.212 g (2) 0.217 g (3) 198 g (4) 212 g (5) 217 g

16. மென்னமிலமான HA ஐயும் அதன் சோடியம் உப்பான NaA ஐயும் கொண்டுள்ள கரைசலின் pH பெறுமானம் ***a*** ஆகும். HA இற்கும் NaA இற்குமிடையே உள்ள செறிவு விகிதத்தின் பெறுமானம் பத்து மடங்கினால் அதிகரிக்கப்பட்டதாயின், கரைசலின் புதிய pH பெறுமானம்
(1) ***a*** − 1 (2) ***a*** − 1/10 (3) ***a*** + 1 (4) ***a*** − 10 (5) ***a*** + 10

Download Past Papers at : www.freebooks.lk




17. $C_6H_5-C\equiv C-C_6H_5 \xrightarrow[\text{ஐதான } H_2SO_4]{HgSO_4} A \xrightarrow[Br_2]{FeBr_3} B$

மேற்தரப்பட்ட தாக்க ஒழுங்குமுறையில் **A, B** என்பவற்றின் கட்டமைப்புகள் முறையே

(1) $C_6H_5COCH_2C_6H_5$, (m-Br)C_6H_4–$COCH_2$–C_6H_4(m-Br)
(2) $C_6H_5COCH_2C_6H_5$, Br–C_6H_4–$COCH_2$–C_6H_4–Br
(3) $C_6H_5COCOC_6H_5$, (m-Br)C_6H_4–$COCO$–C_6H_4(m-Br)
(4) $C_6H_5CH=C(OH)-C_6H_5$, C_6H_5–CH(Br)–C(Br)(OH)–C_6H_5
(5) $C_6H_5CH_2COC_6H_5$, Br–C_6H_4–CH_2CO–C_6H_4(m-Br)

18. கீழே தரப்பட்ட தாக்கத்தின் வீதத்துக்குரிய **சரியான** தொடர்பைக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.




$2MnO_4^-(aq)+5C_2O_4^{2-}(aq)+16H^+(aq) \rightarrow 2Mn^{2+}(aq)+10CO_2(g)+8H_2O(\ell)$

(1) $\frac{\Delta\left[MnO_4^-(aq)\right]}{\Delta t}=\frac{5}{2}\frac{\Delta\left[C_2O_4^{2-}(aq)\right]}{\Delta t}$ (2) $\frac{\Delta\left[MnO_4^-(aq)\right]}{\Delta t}=-\frac{5}{2}\frac{\Delta\left[C_2O_4^{2-}(aq)\right]}{\Delta t}$

(3) $\frac{\Delta\left[MnO_4^-(aq)\right]}{\Delta t}=10\frac{\Delta\left[C_2O_4^{2-}(aq)\right]}{\Delta t}$ (4) $\frac{\Delta\left[MnO_4^-(aq)\right]}{\Delta t}=\frac{2}{5}\frac{\Delta\left[C_2O_4^{2-}(aq)\right]}{\Delta t}$

(5) $\frac{\Delta\left[MnO_4^-(aq)\right]}{\Delta t}=-\frac{2}{5}\frac{\Delta\left[C_2O_4^{2-}(aq)\right]}{\Delta t}$

19. அறை வெப்பநிலையில் பின்வரும் மின்னிரசாயனக் கலத்தின் அழுத்தம், கலத் தாக்கம் என்பன முறையே



$Ag(s)$ / $AgCl(s)$, $KCl(aq)$ // $Ag^+(aq)$ / $Ag(s)$

($E^o_{AgCl(s)/Ag(s)} = +0.22$ V $E^o_{Ag^+(aq)/Ag(s)} = +0.78$ V)

(1) +0.22 V , $AgCl(s) \longrightarrow Ag^+(aq) + Cl^-(aq)$ (2) +0.56 V , $Ag^+(aq) + Cl^-(aq) \longrightarrow AgCl(s)$
(3) +1.0 V , $AgCl(s) + e \longrightarrow Ag(s) + Cl^-(aq)$ (4) − 0.56 V , $Ag^+(aq) + e \longrightarrow Ag(s)$
(5) −1.0 V , $Ag^+(aq) + Cl^-(aq) \longrightarrow AgCl(s)$

20. N_2O_5 மூலக்கூறுக்கு (அடிப்படைக் கட்டமைப்பு O—N(O)—O—N(O)—O) எத்தனை பரிவுக் கட்டமைப்புகளை வரைய முடியும் ?
(1) 5 (2) 6 (3) 8 (4) 9 (5) தரப்பட்ட விடைகளில் எதுவுமன்று.


21. நாகத்தின் (Zn) இரசாயனவியல் தொடர்பாகப் பின்வரும் எக்கூற்று **தவறானது** ?
(1) Zn தாண்டலில்லா மூலகமாக இருப்பதோடு அதன் பொதுவானதும் உறுதியானதுமான நேர் ஒட்சியேற்ற நிலை +2 ஆகும்.
(2) பொதுவாக Zn சிக்கல்களின் கரைசல்கள் நிறமற்றவையாகும்.
(3) மற்றைய 3*d* தொகுப்பு மூலகங்களோடு ஒப்பிடும்போது Zn இன் உருகுநிலை கருதத்தக்க வகையில் உயர்வானதாகும்.
(4) Zn^{2+} இன் ஆரை Ca^{2+} இன் ஆரையை விடச் சிறியதாகும்.
(5) அமிலக் கரைசல்களில் H_2S இனால் ZnS ஐ வீழ்படியச் செய்யமுடியாது.

22. தரப்பட்டுள்ள வெப்பநிலையில் வால்வுடன் கூடிய ஒரு மூடிய விறைத்த கொள்கலத்தில் பின்வரும் சமநிலை உள்ளது எனக் கருதுக. $N_2(g) + 3H_2(g) \rightleftharpoons 2NH_3(g)$
வால்வினூடாக ஒரு மேலதிக அளவு $N_2(g)$ கொள்கலத்தினுள் புகுத்தப்படும்போது $H_2(g)$ இனதும் $NH_3(g)$ இனதும் செறிவுகள் முறையே
(1) கூடும், கூடும். (2) குறையும், குறையும். (3) கூடும், குறையும்.
(4) குறையும், கூடும். (5) மாறாது, மாறாது.

23. CH_4 ஆனது மிகை O_2 உடன் தாக்கம்புரிந்து CO_2 உம் நீரும் உருவாதல் ஒரு புறவெப்பச் செயன்முறையாகும். 1 மூல் CH_4 ஆனது O_2 உடன் தாக்கம்புரியும்போது உருவாகும் நீர், திரவ நிலையில் இருக்கும் நிலைமையின் கீழ் வெப்பவுள்ளுறை மாற்றம் 890.4 k J mol^{-1} ஆகும். உருவாகும் நீர் நீராவி நிலையில் இருக்கும் நிலைமையின் கீழ் இத்தாக்கம் நிகழ்த்தப்படும்போது வெப்பவுள்ளுறை மாற்றம் 802.4 kJ mol^{-1} ஆகும். $H_2O(l) \longrightarrow H_2O(g)$ என்னும் தாக்கத்திற்கான வெப்பவுள்ளுறை மாற்றம் (k J mol^{-1} இல்)
(1) − 88 (2) − 44 (3) 22 (4) 44 (5) 88

24. **X** என்னும் மூலகம் 3*d* தொகுப்பிற்குரியது. அது பின்வரும் இயல்புகளைக் காட்டுகின்றது.
I. 3*d* தொகுப்பு மூலகங்களில் இம்மூலகம் அதியுயர் நேர் ஒட்சியேற்ற நிலையைக் காட்டும்.
II. இம்மூலகம் அமில; ஈரியல்பு, மூல ஒட்சைட்டுகளை உருவாக்கும்.
X ஆனது
(1) Cr (2) Mn (3) Fe (4) Co (5) Zn

Download Past Papers at : www.freebooks.lk

25. 

மேலே தரப்பட்டுள்ள தாக்க ஒழுங்குமுறையில் **S, T, U** ஆகியவற்றின் கட்டமைப்புகள் முறையே


(1) $CH_3-CH(OH)-CH_2CH_2OH$, CH_3COCH_2CHO, $CH_3CH_2CH_2CH_3$

(2) $CH_3-CH(OH)-CH_2CO_2H$, CH_3COCH_2CHO, $CH_3CH_2CH_2CH_3$


(3) $CH_3COCH_2CH_2OH$, CH_3COCH_2CHO, $CH_3CH_2CH_2CH_3$

(4) $CH_3COCH_2CH_2OH$, CH_3COCH_2CHO, $CH_3COCH_2CH_3$

(5) $CH_3CH(OH)-CH_2CH_2OH$, $CH_3CH(OH)CH_2CHO$, $CH_3CH(OH)CH_2CH_3$

26. 

என்ற மாற்றலுக்குப் பின்வரும் முறைகளுள் மிகப் பொருத்தமானது எது ?



27. ஆவர்த்தன அட்டவணையில் *s*-தொகுப்பு மூலகங்கள் (கூட்டம் I, Li இலிருந்து Cs, கூட்டம் II, Be இலிருந்து Ba) தொடர்பாகப் பின்வருவனவற்றுள் எக்கூற்று **உண்மையானது** ?


(1) கூட்டங்கள் I, II ஆகியவற்றிலுள்ள எல்லா மூலகங்களும் நீருடன் தாக்கம்புரிந்து H_2 வாயுவைத் தருகின்றன.
(2) கூட்டம் I இல் உள்ள எல்லா மூலகங்களும் N_2 வாயுவுடன் தாக்கம்புரிகின்றன.
(3) Mg ஆனது ஐதான H_2SO_4, செறிந்த H_2SO_4 ஆகிய இரண்டுடனும் தாக்கம்புரிந்து முறையே $H_2(g)$, $SO_2(g)$ என்பவற்றைத் தருகின்றது.
(4) Li வளியுடன் தாக்கம்புரிந்து Li_2O, LiO_2, Li_3N ஆகியன அடங்கும் கலவையை உருவாக்கும்.
(5) கூட்டம் I இல் எல்லா மூலகங்களும் H_2 வாயுவுடன் தாக்கம்புரிந்து பங்கீட்டுவலு ஐதரைட்டுகளை உருவாக்கும்.

28. Cd (s) /Cd^{2+}(aq), Zn(s)/Zn^{2+}(aq) ஆகிய மின்வாய்களைக் கொண்ட கல்வானிக் கலம் தொடர்பாகப் பின்வரும் கூற்றுகளில் **தவறானது** எது ? $E^{\circ}_{Zn^{2+}_{(aq)}/Zn_{(s)}} = -0.76\ V$, $E^{\circ}_{Cd^{2+}_{(aq)}/Cd_{(s)}} = -0.40\ V$


(1) Zn மின்வாய் அனோட்டு ஆகும்.
(2) வெளிச்சுற்றினூடாக இணைக்கும்போது Zn மின்வாயிலிருந்து Cd மின்வாய் வரை இலத்திரன்கள் செல்லும்.
(3) கலம் செயற்படும்போது Zn மின்வாயில் தாழ்த்தல் நடைபெறும்.
(4) கலம் செயற்படும்போது Cd^{2+} (aq) இன் செறிவு குறைவடையும்.
(5) கலம் செயற்படும்போது Zn^{2+} (aq) இன் செறிவு அதிகரிக்கும்.

Download Past Papers at : www.freebooks.lk


29. கீழே தரப்பட்டுள்ள பீனோலின் தாக்கங்கள் இரண்டையும் கருதுக.



A, B ஆகிய கட்டமைப்புகள் முறையே



30. **X** என்னும் பதார்த்தத்தின் $\Delta H_{\text{உருகல்}}$ இன் பெறுமானத்தின் பருமன் அதன் $\Delta H_{\text{ஆவியாதல்}}$ இன் பெறுமானத்தின் பருமனிலும் குறைவாகும் (அதாவது $|\Delta H_{\text{உருகல்}}| < |\Delta H_{\text{ஆவியாதல்}}|$). வெப்பநிலை T_1 இல் **X** உருகி அதன்பின் வெப்பமாக்கும்போது வெப்பநிலை T_2 இல் அது ஆவியாகிறது. மாறா வீதத்தில் **X** இன் ஒரு திண்ம மாதிரியை வெப்பமாக்கும்போது வெப்பநிலை, நேரம் என்பவற்றுக்கிடையிலான மாறலைக் கீழே தரப்பட்ட எவ்வரிப்படம் சிறப்பாக வகைகுறிக்கிறது ?
(குறிப்பு: திண்மம் (s), திரவம் (ℓ), வாயு (v))



● 31 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (*a*), (*b*), (*c*), (*d*) என்னும் நான்கு தெரிவுகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று திருத்தமானது அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவை திருத்தமானவை. திருத்தமான தெரிவை/தெரிவுகளைத் தேர்ந்தெடுக்க.

(*a*), (*b*) ஆகியன மாத்திரம் திருத்தமானவையெனில் (1) இன் மீதும்
(*b*), (*c*) ஆகியன மாத்திரம் திருத்தமானவையெனில் (2) இன் மீதும்
(*c*), (*d*) ஆகியன மாத்திரம் திருத்தமானவையெனில் (3) இன் மீதும்
(*d*), (*a*) ஆகியன மாத்திரம் திருத்தமானவையெனில் (4) இன் மீதும்

வேறு தெரிவுகளின் எண்ணோ சேர்மானங்களோ திருத்தமானவையெனில் (5) இன் மீதும்
உமது விடைத்தாளில் கொடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய விடையைக் குறிப்பிடுக.

மேற்கூறிய அறிவுறுத்தற் சுருக்கம்

(1)	(2)	(3)	(4)	(5)
(*a*), (*b*) ஆகியன மாத்திரம் திருத்தமானவை	(*b*), (*c*) ஆகியன மாத்திரம் திருத்தமானவை	(*c*), (*d*) ஆகியன மாத்திரம் திருத்தமானவை	(*d*), (*a*) ஆகியன மாத்திரம் திருத்தமானவை	**வேறு தெரிவுகளின்** எண்ணோ சேர்மானங்களோ திருத்தமானவை

31. தாக்க வரிசை தொடர்பாகப் பின்வரும் கூற்றுகளில் எது/எவை **தவறானது/தவறானவை** ?

(*a*) முதன்மைத் தாக்கத்தின் வரிசை முழு எண்ணாக இருத்தல் வேண்டும்.
(*b*) தாக்கத்தின் வரிசையானது பரிசோதனை ரீதியாகத் துணியப்படும் ஒரு பெறுமானமாகும்.
(*c*) தாக்கமொன்றின் வரிசை எப்பொழுதும் சமன்செய்யப்பட்ட சமன்பாட்டிலுள்ள தாக்கிகளின் பீசமானக் குணகங்களின் கூட்டுத்தொகைக்குச் சமனாகும்.
(*d*) தாக்கமொன்றின் வரிசையானது வீத விதிக் கோவையில் உள்ள தாக்கிகளின் மூலர்ச் செறிவுகளின் அடுக்குகளின் கூட்டுத்தொகைக்குச் சமனாகும்.

Download Past Papers at : www.freebooks.lk

32. $C_6H_5-\overset{a\ b}{C}\equiv\overset{c}{C}-\overset{d}{C}H_3$ என்னும் மூலக்கூறு தொடர்பான பின்வரும் கூற்றுகளுள் எது/எவை **உண்மையானது/உண்மையானவை** ?

(a) **a, b, c, d** எனப் பெயரிடப்பட்ட காபன் அணுக்கள் ஒரு நேர்கோட்டில் இருக்கமாட்டா.

(b) **a, b, d** எனப் பெயரிடப்பட்ட காபன் அணுக்கள் முறையே sp^2, sp, sp^3 எனக் கலப்பாக்கமடைந்துள்ளன.

(c) பென்சீன் வளையத்தில் எல்லாக் காபன், காபன் பிணைப்புகளின் நீளங்களும் ஒன்றுக்கொன்று சமனாகவுள்ளதோடு அவை $C\equiv C$ பிணைப்பு நீளத்திலும் பார்க்க நீளம் கூடியவையாகும்.

(d) பென்சீன் வளையத்தில் எல்லாக் காபன், காபன் பிணைப்பு நீளங்களும் ஒன்றுக்கொன்று சமனாக உள்ளதோடு அவை $C\equiv C$ பிணைப்பு நீளத்திலும் நீளம் குறைந்தவையாகும்.

33. மென்சவ்வுக் கலத்தைப் பயன்படுத்தி நடைபெறும் NaOH உற்பத்தியுடன் தொடர்பாகப் பின்வரும் கூற்றுகளில் எது/எவை **உண்மையானது/உண்மையானவை** ?

(a) மின்பகுப்பின்போது $Na^+(aq)$ அயன்கள் கதோட்டு அறையிலிருந்து அனோட்டு அறைக்கு மென்சவ்வினூடாகச் செல்லும்.

(b) அனோட்டாகவும் கதோட்டாகவும் முறையே தைத்தேனியம், நிக்கல் என்பன பயன்படுத்தப்படுகின்றன.

(c) இம்முறையின் மூலம் மிகவும் தூய NaOH இனைத் தயாரிக்கலாம்.

(d) H_2 (g), Cl_2 (g) என்பன பக்கவிளைபொருளாக முறையே அனோட்டிலும் கதோட்டிலும் உருவாகின்றன.

34. தாக்கமொன்றின் ஏவற்சக்தி தொடர்பான பின்வரும் கூற்றுகளில் எது/எவை **தவறானது/தவறானவை** ?

(a) புறவெப்பச் செயன்முறையொன்றில் பின்முகத் தாக்கத்தின் ஏவற்சக்தியை விட முன்முகத் தாக்கத்தின் ஏவற்சக்தி குறைவானதாகும்.

(b) விரைவாக நடைபெறும் தாக்கத்தின் ஏவற்சக்தியிலும் பார்க்க மெதுவாக நடைபெறும் தாக்கத்தின் ஏவற்சக்தி குறைவாகும்.

(c) தரப்பட்ட தாக்கப் பாதையின் ஏவற்சக்தியில் ஊக்கி பாதிப்பை ஏற்படுத்தாது.

(d) தாக்கிகளின் தொடக்கச் செறிவு அதிகம் எனில் ஏவற்சக்தி குறைவு ஆகும்.

35. ஒளியியற் சமபகுதிச்சேர்வு தொடர்பாகப் பின்வரும் கூற்றுகளில் எது/எவை **உண்மையானது/உண்மையானவை** ?

(a) ஒன்றுக்கொன்று ஆடிவிம்பங்களாக இருக்கும் ஒளியியற் சமபகுதியங்களின் ஒரு சோடியானது எதிருருக்கள் எனப்படும்.

(b) ஒன்றுக்கொன்று ஆடிவிம்பங்களாக இருக்கும் ஒளியியற் சமபகுதியங்களின் ஒரு சோடியானது ஈர்வெளிமயச் சமபகுதியங்கள் எனப்படும்.

(c) ஒன்றுக்கொன்று ஆடிவிம்பங்களாக இல்லாத ஒளியியற் சமபகுதியங்களின் ஒரு சோடியானது எதிருருக்கள் எனப்படும்.

(d) ஒன்றுக்கொன்று ஆடிவிம்பங்களாக இல்லாத ஒளியியற் சமபகுதியங்களின் ஒரு சோடியானது ஈர்வெளிமயச் சமபகுதியங்கள் எனப்படும்.

36. சக்திச்சொட்டெண் $n=3$ ஐயும் $m_\ell=-2$ ஐயும் கொண்டிருக்கும் ஓர் இலத்திரன் தொடர்பாகப் பின்வரும் கூற்றுகளில் எது/எவை **உண்மையானது/உண்மையானவை** ?

(a) இவ் இலத்திரன் மூன்றாம் பிரதான சக்தி மட்டத்தில் உள்ளது.

(b) இவ் இலத்திரன் ஒரு d ஓபிற்றலில் உள்ளது.

(c) இவ் இலத்திரன் ஒரு p ஓபிற்றலில் உள்ளது.

(d) இவ் இலத்திரன் ஒரு சுழற்சிச் சக்திச்சொட்டெண் $m_s=+1/2$ இனைக் கொண்டிருத்தல் வேண்டும்.

37. அநேகமான தாக்கங்கள் தாழ் வெப்பநிலைகளிலும் பார்க்க உயர் வெப்பநிலைகளில் மிக விரைவாக நடைபெறும். இவ் அவதானிப்பை விளக்குவதற்கான சரியான காரணத்தை/காரணங்களைப் பின்வரும் கூற்றுகளில் எது/எவை தருகின்றது/தருகின்றன ?

(a) வெப்பநிலை அதிகரிப்பானது தாக்கத்தின் ஏவற்சக்தியை அதிகரிக்கும்.

(b) வெப்பநிலை அதிகரிப்பானது தாக்கத்தின் ஏவற்சக்தியைக் குறைக்கும்.

(c) வெப்பநிலையை அதிகரிக்கும்போது அலகு நேரத்திற்கான அலகுக் கனவளவுக்கான மோதுகைகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

(d) வெப்பநிலை அதிகரிப்பின் விளைவாக உயர் சக்தி மோதல்களின் சதவீதம் அதிகரிக்கும்.

38. சமநிலைத் தாக்கமொன்றின் சமநிலை மாறிலி K தொடர்பாகப் பின்வரும் கூற்றுகளில் எது/எவை **தவறானது/தவறானவை** ?

(a) அமுக்கம் மாறும்போது சமநிலை மாறிலி மாறாது.

(b) விளைபொருளொன்றின் செறிவு அதிகரிக்கப்படும்போது சமநிலை மாறிலி அதிகரிக்கும்.


(c) வெப்பநிலை மாற்றத்துடன் சமநிலை மாறிலி மாற்றமடையக்கூடும்.


(d) தாக்கியொன்றின் செறிவு அதிகரிக்கப்படும்போது சமநிலை மாறிலி அதிகரிக்கும்.


39. பின்வரும் எச்சேர்வை/சேர்வைகள் கீழே தரப்பட்டுள்ள தாக்கங்கள் **இரண்டுக்கும்** உட்படும் ?


I. நீர் NaOH உடனான தன்ஒடுங்கல்

II. அமோனியாசேர் $AgNO_3$ உடனான ஒட்சியேற்றம்

(a) 

(b) 

(c) 

(d) 

Download Past Papers at : www.freebooks.lk

40. பல்பகுதியங்கள் தொடர்பாகப் பின்வரும் கூற்றுகளுள் எது/எவை **உண்மையானது/உண்மையானவை** ?
(a) PVC ஒரு வெப்பமிளக்கும் பல்பகுதியமாக இருக்கும் அதே வேளை குளோரீன் இருப்பதன் காரணமாக இலகுவாகத் தீப்பிடிக்காது.
(b) செறிந்த H_2SO_4 முன்னிலையில் பீனோல், போமல்டிகைட்டு என்பவற்றுக்கிடையிலான தாக்கத்தின் மூலம் பேக்லைற் உருவாகிறது.
(c) செறிந்த H_2SO_4 முன்னிலையில் யூரியாவும் போமல்டிகைட்டும் தாக்கம்புரிந்து ஒரு வெப்பமிளக்கும் பல்பகுதியம் உருவாகும்.
(d) ரெப்லோன் ஒரு வெப்பமிறுக்கும் பல்பகுதியமாகும்.

- **41** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு கூற்றுகள் தரப்பட்டுள்ளன. அட்டவணையில் உள்ள (1), (2), (3), (4), (5) ஆகிய தெரிவுகளிலிருந்து ஒவ்வொரு வினாவுக்கும் தரப்பட்டுள்ள இரு கூற்றுகளுக்கும் மிகவும் சிறப்பாகப் பொருந்தும் தெரிவைத் தெரிந்து பொருத்தமாக விடைத்தாளிற் குறிப்பிடுக.

தெரிவுகள்	முதலாம் கூற்று	இரண்டாம் கூற்று
(1)	உண்மை	உண்மையாக இருந்து முதலாம் கூற்றுக்குத் திருத்தமான விளக்கத்தைத் தருவது.
(2)	உண்மை	உண்மையாக இருந்து முதலாம் கூற்றுக்குத் திருத்தமான விளக்கத்தைத் தராதது.
(3)	உண்மை	பொய்
(4)	பொய்	உண்மை
(5)	பொய்	பொய்

	முதலாம் கூற்று	இரண்டாம் கூற்று
41.	நீர் முன்னிலையில் NCl_3 ஒரு வெளிற்றும் கருவியாகத் தொழிற்படலாம்.	NCl_3 ஆனது நீருடன் தாக்கம்புரிந்து NH_3, HOCl ஆகியவற்றைத் தரும்.
42.	எதைல் குளோரைட்டை விட இலகுவாக வயனைல் குளோரைட்டு கருநாட்ட பிரதியீட்டுத் தாக்கங்களுக்கு உட்படும்.	பரிவு காரணமாக வயனைல் குளோரைட்டில் காபனுக்கும் குளோரீனுக்கும் இடையிலான பிணைப்பு இரட்டைப் பிணைப்புக்குரிய இயல்புகளைக் காட்டுகின்றபோதிலும் இவ்வியல்பு எதைல் குளோரைட்டுக்கு இல்லை.
43.	ஒரு மூடிய தொகுதியில் நீராவி ஒடுங்கும்போது சூழலின் எந்திரப்பி குறைந்து செல்லும்.	தொகுதியினால் வெளிவிடப்படும் வெப்பத்தின் மூலம் சூழலிலுள்ள துணிக்கைகளின் வெப்ப இயக்கம் அதிகரிக்கும்.
44.	கந்தகம், NaOH என்பவற்றுக்கிடையிலான தாக்கம் இருவழிவிகாரத் தாக்கத்திற்கு ஓர் உதாரணமாகும்.	மூலகமொன்று ஒரே நேரத்தில் ஒட்சியேற்றம், தாழ்த்தல் என்பவற்றுக்கு உட்படும்போது அது இருவழிவிகாரம் எனப்படும்.
45.	லூகாசின் சோதனையில் புடை அற்ககோல்கள் வழி அற்ககோல்களை விட வேகமாகத் தாக்கம்புரியும்.	புடை காபோகற்றயன்கள் வழிக் காபோகற்றயன்களை விட உறுதி குறைந்தவை.
46.	தரப்பட்ட வெப்பநிலையில் மூடிய கொள்கலத்தில் காணப்படும் சமநிலையிலுள்ள N_2O_4, NO_2 ஆகியவற்றின் கலவையைக் குளிர்த்தும்போது NO_2 இன் செறிவு அதிகரிக்கும்.	N_2O_4 ஆனது NO_2 ஆகக் கூட்டற்பிரிவடைவது ஒரு புறவெப்பத்தாக்கமாகும்.
47.	சோல்வே செயன்முறையில் NaCl இற்குப் பதிலாக KCl ஐப் பயன்படுத்தலாம்.	$KHCO_3$, $NaHCO_3$ என்பவை அநேகமாக நீரில் ஒரேவிதமான கரைதிறன்களைக் கொண்டவை.
48.	பீனோல் ஓர் அரோமற்றிக் சேர்வை; அதே வேளை எதனோல் அவ்வாறன்று.	எதனோலுக்குச் சார்பாக எதொட்சைட்டு அயனின் உறுதித்தன்மையை விட பீனோலுக்குச் சார்பாக பீனோற் அயனின் உறுதித்தன்மை அதிகமாகும்.
49.	நீரை விட அமில நீர் ஊடகத்தில் $BaF_2(s)$ இற்கு உயர் கரைதிறன் உண்டு.	$BaF_2(s)$ இனை அமிலத்தில் கரைக்கும்போது HF உருவாவதன் காரணமாக K_{sp} இனை மாறிலியாக வைத்திருப்பதன் பொருட்டு $Ba^{2+}(aq)$ இன் செறிவு அதிகரிக்கும்.
50.	பச்சைவீட்டு வாயுக்கள் சூரியனிலிருந்து காலப்படும் செங்கீழ்க் கதிர்கள் புவியின் மேற்பரப்பை அடைவதைத் தடைசெய்யும்.	செங்கீழ்க் கதிர்களை அகத்துறிஞ்சும் ஆற்றல் பச்சைவீட்டு வாயுவின் முக்கிய இயல்பு ஒன்றாகும்.

* * *

Download Past Papers at : www.freebooks.lk

ஆவர்த்தன அட்டவணை

1	1 **H**																	2 **He**
2	3 **Li**	4 **Be**											5 **B**	6 **C**	7 **N**	8 **O**	9 **F**	10 **Ne**
3	11 **Na**	12 **Mg**											13 **Al**	14 **Si**	15 **P**	16 **S**	17 **Cl**	18 **Ar**
4	19 **K**	20 **Ca**	21 **Sc**	22 **Ti**	23 **V**	24 **Cr**	25 **Mn**	26 **Fe**	27 **Co**	28 **Ni**	29 **Cu**	30 **Zn**	31 **Ga**	32 **Ge**	33 **As**	34 **Se**	35 **Br**	36 **Kr**
5	37 **Rb**	38 **Sr**	39 **Y**	40 **Zr**	41 **Nb**	42 **Mo**	43 **Tc**	44 **Ru**	45 **Rh**	46 **Pd**	47 **Ag**	48 **Cd**	49 **In**	50 **Sn**	51 **Sb**	52 **Te**	53 **I**	54 **Xe**
6	55 **Cs**	56 **Ba**	**La-** **Lu**	72 **Hf**	73 **Ta**	74 **W**	75 **Re**	76 **Os**	77 **Ir**	78 **Pt**	79 **Au**	80 **Hg**	81 **Tl**	82 **Pb**	83 **Bi**	84 **Po**	85 **At**	86 **Rn**
7	87 **Fr**	88 **Ra**	**Ac-** **Lr**	104 **Rf**	105 **Db**	106 **Sg**	107 **Bh**	108 **Hs**	109 **Mt**	110 **Uun**	111 **Uuu**	112 **Uub**	113 **Uut**	...				

57 **La**	58 **Ce**	59 **Pr**	60 **Nd**	61 **Pm**	62 **Sm**	63 **Eu**	64 **Gd**	65 **Tb**	66 **Dy**	67 **Ho**	68 **Er**	69 **Tm**	70 **Yb**	71 **Lu**
89 **Ac**	90 **Th**	91 **Pa**	92 **U**	93 **Np**	94 **Pu**	95 **Am**	96 **Cm**	97 **Bk**	98 **Cf**	99 **Es**	100 **Fm**	101 **Md**	102 **No**	103 **Lr**

Download Past Papers at : www.freebooks.lk

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
ජාතික ඇගයීම් හා පරීක්ෂණ සේවාව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்குமான சேவை

අ.පො.ස.(උ.පෙළ) විභාගය - 2015
க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை - 2015

විෂයය අංකය / பாட இலக்கம் } 02 විෂයය / பாடம் } இரசாயனவியல்

ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம் - I පත්‍රය/பத்திரம் I

ප්‍රශ්න අංකය வினா இல.	පිළිතුරු අංකය விடை இல.	ප්‍රශ්න අංකය வினா இல.	පිළිතුරු අංකය விடை இல.	ප්‍රශ්න අංකය வினா இல.	පිළිතුරු අංකය விடை இல.	ප්‍රශ්න අංකය வினா இல.	පිළිතුරු අංකය விடை இல.	ප්‍රශ්න අංකය வினா இல.	පිළිතුරු අංකය விடை இல.
01.	2	11.	1	21.	3	31.	5	41.	1
02.	3	12.	2	22.	4	32.	2	42.	4
03.	2	13.	1	23.	4	33.	2	43.	4
04.	3	14.	5	24.	2	34.	5	44.	1/3
05.	1	15.	1	25.	1	35.	4/5	45.	3
06.	2	16.	1	26.	2	36.	1	46.	5
07.	4	17.	5	27.	3	37.	3	47.	5
08.	3	18.	4	28.	3	38.	5	48.	2
09.	3	19.	2	29.	3	39.	5	49.	1
10.	3	20.	4	30.	1	40	1	50	4

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට / ஒரு சரியான விடைக்கு ලකුණු / புள்ளி (01) බැගින் / வீதம் 50


මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் $1 \times 50 = 50$

Download Past Papers at : www.freebooks.lk

பகுதி A - அமைப்புக் கட்டுரை

நான்கு வினாக்களுக்கும் விடைகளை இத்தாளிலேயே எழுதுக.
(ஒவ்வொரு விடைக்கும் 10 புள்ளிகள் வழங்கப்படும்.)

1. (a) பின்வரும் இரசாயன இனங்களைக் கருத்திற் கொள்க.



XeF_2, NO_3^-, SF_5^-, Na_2SO_4, SO_3, HF

மேற்தரப்பட்ட இனங்களுள் எது

(i) அயன் பிணைப்புகள், பங்கீட்டுவலு பிணைப்புகள் ஆகிய இரண்டையும் கொண்டிருக்கும்? .... Na_2SO_4

(ii) BF_3 உடன் சம இலத்திரனியலைக் கொண்டிருக்கும்? .... NO_3^-

(iii) சதுரக் கூம்பக வடிவத்தைக் கொண்டிருக்கும்? .... SF_5^-

(iv) அதன் மிக உறுதியான கட்டமைப்பில் பிணைப்பு இலத்திரன்களையும் பிணைப்பில் ஈடுபடாத இலத்திரன்களையும் சம எண்ணிக்கையில் கொண்டிருக்கும்? .... SO_3


(v) 1s அணு ஒபிற்றலும் 2p அணு ஒபிற்றலும் மேற்பொருந்துவதால் விளைவாகும் σ–பிணைப்பைக் கொண்டிருக்கும்? .... HF

(vi) 180° பிணைப்புக் கோணத்தைக் கொண்டிருக்கும்? .... XeF_2 **(04 x 6)**

*N.B: ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடைகள் தரப்படின் அதற்கு புள்ளிகள் வழங்கவேண்டாம். 24 marks

(b) H_3O_3**QRT** என்னும் சேர்வை அமில இயல்புகளைக் காட்டும். அதனை நீரில் கரைக்கும்போது H^+ இழக்கப்பட்டு $[H_2O_3QRT]^-$ என்னும் அனயன் உருவாகும். இவ் அனயனின் மிகவும் ஏற்றுக்கொள்ளத்தக்க லூயி கட்டமைப்பில் மறை ஏற்றம் ஓர் ஒட்சிசன் அணுவில் காணப்படும். மற்றைய அணுக்கள் ஏற்றங்கள் எதனையும் கொண்டிருக்கமாட்டாது. **Q, R, T** ஆகிய மூலகங்கள் மின்னெதிர்த்தன்மை 2 இலும் கூடிய (பௌலிங் அளவுத்திட்டம்) அல்லுலோகங்கள் ஆகும். **Q, R** ஆகிய மூலகங்கள் ஆவர்த்தன அட்டவணையில் இரண்டாம் ஆவர்த்தனத்தைச் சேர்ந்ததாக இருப்பதோடு **T** மூலகம் மூன்றாம் ஆவர்த்தனத்தைச் சேர்ந்தது.


கீழே தரப்பட்டுள்ள (i) தொடக்கம் (v) வரையான வினாக்கள் அனயன் $[H_2O_3QRT]^-$ இனை அடிப்படையாகக் கொண்டன. அதன் அடிப்படைக் கட்டமைப்பு கீழே தரப்பட்டுள்ளது.



(i) **Q, R, T** ஆகிய மூலகங்களை இனங்காண்க. **(02 + 02 + 02)**

Q = ...O...... **R** = ...N...... **T** = ...S......

(ii) இவ் அனயனுக்கு **மிகவும் ஏற்றுக்கொள்ளத்தக்க** லூயி கட்டமைப்பை வரைக.




* N.B: b(i) இல் Q, R, T மூன்றும் சரியாக இனங்காணப்பட்டு அவற்றைப் பயன்படுத்தி சரியான உலூயியின் கட்டமைப்பு வரையப்படும்போது புள்ளிகள் வழங்கப்படும்.

(08)

(iii) இவ் அனயனின் **ஆறு** பரிவுக் கட்டமைப்புகளை வரைக.

Download Past Papers at : www.freebooks.lk

(iii)



03 × 6 = 18 marks)

ஏதாவது ஆறு

Download Past Papers at : www.freebooks.lk

(iv) கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் **Q, R, T** ஆகிய அணுக்களின்

I. அணுவைச் சூழ உள்ள இலத்திரன் சோடிக் கேத்திரகணிதம் (இலத்திரன் சோடிகளின் ஒழுங்கமைப்பு)

II. அணுவைச் சூழ உள்ள வடிவம்

III. அணுவின் கலப்பாக்கம்

IV. அணுவைச் சூழ உள்ள பிணைப்புக் கோணத்தின் அண்ணளவான பெறுமானம்

என்பவற்றைக் குறிப்பிடுக.

	Q	R	T
I. இலத்திரன் சோடிக் கேத்திரகணிதம்	நான்முகி	நான்முகி	நான்முகி
II. வடிவம்	கோணல்/V	பிரமிட்	நான்முகி
III. கலப்பாக்கம்	SP^3	SP^3	SP^3
IV. பிணைப்புக் கோணம்	103 - 105°	106 - 108°	108 - 110°

(01 x 12 = 12)

<105 <108 <110

(v) மேலே பகுதி (ii) இல் வரைந்த லூயி கட்டமைப்பில் பின்வரும் σ-பிணைப்புகளின் உருவாக்கத்துடன் சம்பந்தப்பட்ட அணு/கலப்பின ஒபிற்றல்களை இனங்காண்க.

I. **Q—R** **Q** sp^3 (h.o.), **R** sp^3 (h.o.)

II. **R—T** **R** sp^3 (h.o.), **T** sp^3 (h.o.)

III. **T—O⁻** **T** sp^3 (h.o.), O^- 2p (a.o.) or sp^3 (h.o.)

N.B : b(ii) இல் உலூயின் கட்டமைப்பு தவறாயினும் மையவரையைச் சூழவுள்ள ஒழுங்கமைப்பு / கள் சரியாயின் b(iv), b(v) இன்படி புள்ளிகள் வழங்குக. **(01 x 6 = 06 marks)**

(vi) I. பங்கீட்டுவலுச் சேர்வையொன்றின் / அயனொன்றின் லூயி கட்டமைப்பு மூலம் **நேரடியாக** வழங்கப்படும் தகவல்கள் யாவை எனக் குறிப்பிடுக.

(1) வலுவளவு இலத்திரன்களின் பரம்பல் (பிணைப்புச் சோடிகள்/தனிச்சோடிகள் ஆக) (2) அணுக்களின் மீது ஏற்றம் **(02 + 01)**

II. பங்கீட்டுவலுச் சேர்வையொன்றின் / அயனொன்றின் லூயி கட்டமைப்பு மூலம் **நேரடியாக வழங்கப்படாத** தகவல்கள் யாவை எனக் குறிப்பிடுக.

(1) வடிவம் (மையஅணு/அணுக்களைச் சூழவுள்ள)

(2) ஒபிற்றல் கலப்பு

(3) எவ்வாறு பிணைப்புகள் உருவாக்கப்படும் அல்லது எவ் ஒபிற்றல்களில் மேற்பொருந்துகையால் பிணைப்புகள் உருவாகும்.

(4) தனிச்சோடிகளினால் நிரப்பப்படும் ஒபிற்றல்களின் தன்மை

(5) பிணைப்பு கோணங்கள்

ஏதாவது இரண்டு **(02 + 01)**


(1(b) = 56 marks)

Download Past Papers at : www.freebooks.lk

மாற்றுமுறை


1.(b)(i) Q = N R = C T = S (02 + 02 + 02)

(ii)



(08)

(iii)



* N.B: Q, R, T சரியாக இனங்காணப்பட்டு b(i) பின் அவற்றைப் பயன்படுத்தி உலூயியின் கட்டமைப்பில் வரையப்படின் மட்டும் புள்ளிகள் வழங்கப்படும்.

(03 x 6 = 18 marks)

(iv)

	Q	R	T
i. இலத்திரன் சோடி கேத்திரகணிதம்	தளமுக்கோணம்	தளமுக்கோணம்	நான்முகி
ii. வடிவம்	கோணல்/V	தளமுக்கோணம்	நான்முகி
iii. கலப்பு	sp^2	sp^2	sp^2
iv. பிணைப்பு கோணம்	119 - 121°	119 - 121°	108 - 110°

(v)

I. Q sp^2 (h.o.), R sp^2 (h.o.)

II. R sp^2 (h.o.) T sp^3 (h.o.)

III. T sp^2 (h.o.) O^- sp (h.o.) or sp^3 (h.o.)

N.B : b(ii) இல் உலூயின் கட்டமைப்பு தவறாயினும் மையவரையைச் சூழவுள்ள ஒழுங்கமைப்பு / கள் சரியாயின் b(iv), b(v) இன்படி புள்ளிகள் வழங்குக.

Download Past Papers at : www.freebooks.lk

(c) கீழே தரப்பட்டுள்ள கூற்றுகள் **உண்மையானவையா, உண்மையற்றவையா** என்பதைக் குறிப்பிடுக. உமது தெரிவுக்கான காரணங்களைத் தருக.

(i) NH_3, NO_2F, NO_4^{3-} ஆகியவற்றில் நைதரசனின் மின்னெதிர்த்தன்மை **குறைந்துசெல்லும்** ஒழுங்கு $NO_2F > NO_4^{3-} > NH_3$ ஆகும்.

உண்மை (04)

காரணம்	NO_2F	NO_4^{3-}	NH_3	
N மீதான ஏற்றம் அல்லது	+1	+1	0	(02)
OR				
N இன் ஒட்சியேற்றநிலை	+5	+5	-3	
N இன் கலப்பு	sp^2	sp^3	sp^3	(02)

S இயல்பு உயர்வு, மின்னெதிர்த்தன்மை உயர்வு (01)

உயர்வான நேரேற்றம்/ஒட்சியேற்ற நிலை, நடுநிலையை விடக் கூடிய மின்னெதிர்த்தன்மை (01)

ஆகவே N இன் மின்னெதிர்த்தன்மை $NO_2F > NO_4^{3-} > NH_3$

* ஒவ்வொரு வரிசையிலும் மூன்று விடைகளும் சரியாயின் மட்டும் அதற்கு புள்ளிகள் வழங்கப்படவேண்டும்.

(ii) லிதியம் ஏலைட்டுகளில் உருகுநிலைகள் **அதிகரிக்கும்** ஒழுங்கு $LiF < LiCl < LiBr < LiI$ ஆகும்.

(c) (ii) தவறு (04)

காரணம்

கற்றயன் : ஒரே மாதிரி (01)

அனயன் : ஏற்றம் ஒரே மாதிரி. ஆனால் பருமன் F^- தொடக்கம் Cl^- வரை அதிகரிக்கும் (01 + 01)

ஆகவே முனைவாகும் திறன் $I^- > Br^- > Cl^- > F^-$ (01)

ஆகவே பங்கீட்டு தன்மை $LiI > LiBr > LiCl > LiF$ (02)

அல்லது

அயன் தன்மை $LiF > LiBr > LiCl > LiI$

ஆகவே, உருகுநிலை $LiI < LiBr < LiCl < LiF$

மாற்றுவிடை

தவறு (04)

மின்னெதிர்த்தன்மை வேறுபாடு $LiI < LiBr < LiCl < LiF$ (03)

ஆகவே அயன்தன்மை $LiF > LiBr > LiCl > LiI$ (03)

உருகுநிலை $LiI < LiBr < LiCl < LiF$

மாற்றுவிடை

தவறு (04)

பருமன் $I^- > Br^- > Cl^- > F^-$ (02)

$\therefore$ சாலகசக்தி $LiI < LiBr < LiCl < LiF$ (02)

$\therefore$ அயன்தன்மை $LiI < LiBr < LiCl < LiF$ (02)

$\therefore$ உருகுநிலை $LiI < LiBr < LiCl < LiF$


1(c) = 20 marks

Download Past Papers at : www.freebooks.lk


2. (a) **X** என்பது அணு எண் 20 இலும் குறைந்த, ஆவர்த்தன அட்டவணையில் *p*-தொகுப்பு மூலகமாகும். **X** ஐ வளியில் தகனமடையச் செய்யும்போது X_1 என்னும் நிறமற்ற வாயு உருவாகும். X_1 காரமான மணத்தைக் கொண்டது. X_1 இலகுவாக நீரில் கரையும். இக்கரைசலுடன் $BaCl_2$ கரைசலைச் சேர்க்கும்போது வெண்ணிற வீழ்படிவு X_2 உருவாகும். X_2 ஐதான HCl இல் கரைந்து X_3 என்னும் மென்னமிலத்தை விளைபொருள்களுள் ஒன்றாகத் தரும். X_1 அமிலமாக்கப்பட்ட பொற்றாசியம் பேர்மங்கனேற்றுக் கரைசலை நிறமற்றதாக்கும். X_1 ஐ ஒட்சியேற்றும்போது ஒரு வாயு X_4 உருவாகும். X_5 என்னும் வன்னமிலத்தின் கைத்தொழில் உற்பத்திக்கு X_4 பயன்படுத்தப்படும்.

(i) **X** ஐ இனங்கண்டு அதன் பளிங்குருவுள்ள நிலைக்குரிய கட்டமைப்பை வரைக.


X : S அல்லது கந்தகம் **(04)**



OR



OR



(04)

X இன் கட்டமைப்பு

(ii) **X** இன் தரைநிலைக்குரிய இலத்திரன் நிலையமைப்பை எழுதுக. $1s^2 2s^2 2p^6 3s^2 3p^4$ **(04)**

(iii) **X** இன் பொதுவான நேர் ஒட்சியேற்ற நிலைகள் யாவை +2, +4, +6 or +II, +IV, +VI

(ஏதாவது இரண்டு) **(02+02)**

(iv) பின்வரும் சேர்வைகளின் இரசாயனச் சூத்திரங்களை எழுதுக.

X_1 : SO_2


X_2 : $BaSO_3$

X_3 : H_2SO_3

X_4 : SO_3


X_5 : H_2SO_4 **(04 x 5)**

(v) X_1, X_4 ஆகியவற்றின் மிக உறுதியான கட்டமைப்புகளின் வடிவங்களைப் பருமட்டாக வரைக. ஒவ்வொரு பருமட்டு வடிவத்திலும் பிணைப்புக் கோணங்களின் அண்ணளவான பெறுமானங்களைச் சுட்டிக்காட்டுக.



118° - 120°

V அல்லது கோணல் வடிவ அமைப்பு கட்டாயமாகக் காட்டப்படவேண்டும்



தளமுக்கோண அமைப்பு கட்டாயமாக காட்டப்படல் வேண்டும்.

N.B: ஒட்சிசனின் தனிச்சோடிகள் குறிப்பிடல் அவசியமல்ல.


(vi) X_1 இற்கும் அமிலமாக்கப்பட்ட பொற்றாசியம் பேர்மங்கனேற்றுக்கும் இடையிலான தாக்கத்திற்குச் சமன்செய்த இரசாயனச் சமன்பாட்டை எழுதுக.

வரைபு **(02 + 01) + (02 +01)**

கோணம் **(01) + (01)**

Download Past Papers at : www.freebooks.lk


(vi) X_1 இற்கும் அமிலமாக்கப்பட்ட பொற்றாசியம் பேர்மங்கனேற்றுக்கும் இடையிலான தாக்கத்திற்குச் சமன்செய்த இரசாயனச் சமன்பாட்டை எழுதுக.



(vi) $5(SO_2 + 2H_2O \rightarrow SO_4^{2-} + 4H^+ + 2e)$ $(SO_2 + H_2O \rightarrow H_2SO_3)$

$2(MnO_4^- + 8H^+ + 5e \rightarrow Mn^{2+} + 4H_2O)$


$2MnO_4^- + 5SO_2 + 2H_2O \rightarrow 2Mn^{2+} + 5SO_4^{2-} + 4H^+$ (06)



OR $5(SO_3^{2-} + H_2O \rightarrow SO_4^{2-} + 2H^+ + 2e)$

$2(MnO_4^- + 8H^+ + 5e \rightarrow Mn^{2+} + 4H_2O)$

$2MnO_4^- + 5SO_3^{2-} + 6H^+ \rightarrow 2Mn^{2+} + 5SO_4^{2-} + 3H_2O$ (06)



OR $2KMnO_4 + 5SO_2 + 2H_2O \rightarrow 2MnSO_4 + K_2SO_4 + 2H_2SO_4$

(அரைஅயன் சமன்பாடுகள் மட்டும் தரப்படின் ஒவ்வொன்றுக்கு 02 புள்ளிகள்)


(2(a) = 50 marks)

(*b*) A தொடக்கம் E வரையில் பெயரிடப்பட்ட சோதனைக் குழாய்களில் பின்வரும் திண்மங்கள் அடங்கியுள்ளன (ஒழுங்குமுறையில் இன்றி): $Mg(NO_3)_2$, $(NH_4)_2CO_3$, $(NH_4)_2SO_4$, NH_4NO_3, $NaHCO_3$.

இவ் ஒவ்வொரு திண்மத்தையும் வெப்பமேற்றும்போது உருவாகும் விளைபொருள்கள் தொடர்பான விவரங்கள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

திண்மம்	விவரம்
A	1. மூல வெண்தூள்; 2. நீராவி; 3. சுண்ணாம்பு நீரைப் பால் நிறமாக்கும் நிறமற்ற, மணமற்ற வாயு
B	வாயு நிலையிலுள்ள மூன்று விளைபொருள்கள்
C	1. வன் அமிலம்; 2. நெஸ்லரின் சோதனைப்பொருளுடன் கபில நிற வீழ்படிவை / நிறத்தைப் பெற்றுத் தரும் நிறமற்ற வாயு
D	1. நீருடன் தாக்கம் புரிந்து மென்மூலத்துக்குரிய கரைசலை உருவாக்கும் வெண்ணிற ஒட்சைட்டு; 2. அறைவெப்பநிலையில் நிறமற்ற ஈரணு வாயு 3. செங்கபில வாயு
E	1. நீராவி; 2. நேர்கோட்டுக் கட்டமைப்பை உடைய நிறமற்ற, சுவையற்ற, நஞ்சற்ற ஒரு மூவணு வாயு

(i) A தொடக்கம் E வரையிலான திண்மங்களை இனங்காண்க.



A = $NaHCO_3$ B = $(NH_4)_2CO_3$

C = $(NH_4)_2SO_4$ D = $Mg(NO_3)_2$

E = NH_4NO_3 (05 x 5)

(ii) A தொடக்கம் E வரையிலான ஒவ்வொரு திண்மத்தையும் வெப்பமாக்கும்போது நடைபெறும் தாக்கங்களுக்கான சமன்செய்த இரசாயனச் சமன்பாடுகளை எழுதுக.



(ii) $2NaHCO_3(s) \xrightarrow{\Delta} Na_2CO_3(s) + H_2O(g) + CO_2(g)$



$(NH4)_2CO_3(s) \xrightarrow{\Delta} 2NH_3(g) + CO_2(g) + H_2O(g)$



$(NH4)_2SO_4(s) \xrightarrow{\Delta} 2NH_3(g) + H_2SO_4$



$2Mg(NO_3)_2(s) \xrightarrow{\Delta} 2MgO(s) + 4NO_2(g) + O_2(g)$



$NH_4NO_3 \xrightarrow{\Delta} N_2O(g) + 2H_2O(g)$


N.B: பௌதிக நிலைகள் குறிக்கப்படுதல் தேவையன்று

(05 x 5)

(2(b) = 50 marks)

Download Past Papers at : www.freebooks.lk

3. (a) தொடக்க வீதத்தை அளவிடுவதன் மூலம் பின்வரும் தாக்கத்தின் இயக்கவியலைக் கற்க முடியும்.



$$A(aq) + 5B(aq) + 6C(aq) \longrightarrow 3D(aq) + 3E(aq)$$

A, B, C ஆகியவற்றின் தொடக்கச் செறிவுகளை மாற்றி தரப்பட்டுள்ள வெப்பநிலையில் செய்யப்படும் நான்கு பரிசோதனைகள் கீழே அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளன. நேரம் (t/s) உடன் A இன் செறிவு மாற்றம் $[\Delta A]_t$ அளவிடப்பட்டுள்ளது.

பரிசோதனை	$[A]_0$ / mol dm^{-3}	$[B]_0$ / mol dm^{-3}	$[C]_0$ / mol dm^{-3}	$[\Delta A]_0$ / mol dm^{-3}	t/s	தொடக்க வீதம் (R)/mol dm^{-3} s^{-1}
1	0.2	0.2	0.2	0.040	50	R_1 = 8.0×10^{-4} (05)
2	0.4	0.2	0.2	0.096	60	R_2 = 16.0×10^{-4} (1.60×10^{-3}) (05)
3	0.4	0.4	0.2	0.128	40	R_3 = 32.0×10^{-4} (3.20×10^{-3}) (05)
4	0.2	0.2	0.4	0.080	25	R_4 = 32.0×10^{-4} (3.20×10^{-3}) (05)

(i) R_1, R_2, R_3, R_4 ஆகிய தொடக்க வீதங்களைக் கணித்து அட்டவணையைப் பூரணப்படுத்துக.

(அட்டவணையில் பெறுமானங்கள் அதேபோன்று அலகுகள் தரப்படுவதாகக் கருதுக. அலகுகட்கு புள்ளிகள் கழிக்கப்படல் வேண்டாம்.)

இறுதிப் பெறுமானங்கள் மட்டும் அட்டவணையில் குறிப்பிடல் போதுமானது.

(ii) A, B, C ஆகிய ஒவ்வொரு தாக்கி சார்பான வரிசைகள் முறையே a, b, c எனவும் வீத மாறிலி k எனவும் கொண்டு a, b, c என்பவற்றைக் கணித்து அப்பெறுமானங்களைப் பயன்படுத்தித் தாக்கத்துக்கான வீதக் கோவையை எழுதுக.

வீதம் $k\,[A]^a[B]^b[C]^c$ (05)

சோதனை - 1 இலிருந்து 8.0×10^{-4} mol dm^{-3} s^{-1} = $k[0.20]^a[0.20]^b[0.20]^c$ (1)

சோதனை - 2 இலிருந்து 16.0×10^{-4} mol dm^{-3} s^{-1} = $k[0.40]^a[0.20]^b[0.20]^c$ (2)

சோதனை - 3 இலிருந்து 32.0×10^{-4} mol dm^{-3} s^{-1} = $k[0.40]^a[0.40]^b[0.20]^c$ (3)

சோதனை - 4 இலிருந்து 32.0×10^{-4} mol dm^{-3} s^{-1} = $k[0.20]^a[0.20]^b[0.40]^c$ (4)　　2.5 × 4 = 10.0

(1)/(2) $1/2 = (1/2)^a$: a = 1 (05)

(2)/(3) $1/2 = (1/2)^b$: b = 1 (05)

(1)/(4) $1/2 = (1/2)^c$: c = 2 (05)

வீதம் $k\,[A][B][C]^2$ (05)

(iii) தாக்கத்தின் ஒட்டுமொத்த வரிசையைக் குறிப்பிடுக.

ஒட்டுமொத்த நிலை = 4 (05)

(iv) தாக்கத்தின் வீத மாறிலி k ஐக் கணிக்க.

சமன்பாடு (1) இலிருந்து

$k = 8.0 \times 10^{-4}$ mol dm^{-3} s^{-1} / (0.20) (0.20) $(0.20)^2$ mol^4 dm^{-12} (05)

$k = 0.5$ mol^{-3} dm^9 s^{-1} (04+01)

ஏனைய சமன்பாடுகட்கும் இதே விடை

3(a) :70 marks

Download Past Papers at : www.freebooks.lk

(*b*) (i) I. வேறொரு பரிசோதனையில் செறிவுகள் $[A]_0 = 1.0 \times 10^{-3}$ mol dm^{-3}, $[B]_0 = 1.0$ mol dm^{-3}, $[C]_0 = 2.0$ mol dm^{-3} ஆயின், தாக்கத்திற்கான வீதக் கோவை, வீதம் (Rate) $= k'[A]^a$ எனத் தரப்படலாம் எனக் காட்டுக. (k' என்பது இந்நிலைமைகளின் கீழ் தாக்கத்தின் வீத மாறிலி ஆகும்.)

வீதம் = $k[A][B][C]^2$ and $[A] = 1 \times 10^{-3}$ mol dm^{-3}, $[B] = 1$ mol dm^{-3}, $[C] = 2$ mol dm^{-3}

$\therefore$ $k[B][C]^2 = k'$ **(05)**

$\therefore$ Rate = $k'[A]^a$ (or Rate = $k'[A]$)

II. மேலே I இற்கான கோவையைப் பெறும்போது பயன்படுத்தப்பட்ட எடுகோளை/எடுகோள்களைக் குறிப்பிடுக.

எடுகோள் [B], [C] >> [A] ஆகும். [B] யும் [C] யும் இப்பரிசோதனையின் போது மாறுவதில்லை. **(05)**

அல்லது [B], [C] மிகையாக உண்டு.

